# கத்திப்பாரா மேம்பாலத்தின் கீழ் கட்டுமான பணி விறுவிறு





கிண்டி, கத்திப்பாரா மேம்பாலத்தின் கீழ் உள்ள காலியிடங்களில், சென்னை மெட்ரோ ரயில்வே நிர்வாகம் சார்பில், பூங்கா, வணிக வளாகங்கள், கட்டும் பணி நடந்து வருகிறது.

**சென்னை, ஏப். 12–**

கத்திப்பாரா மேம்பாலத்தின் கீழ் பகுதியில், மெட்ரோ ரயில் நிறுவனத்தின் சார்பில், சிறு கடைகள், ஓட்டல்கள், பூங்காக்கள், பஸ் நிறுத்தங்கள் அமைப்பதற்கான கட்டுமானப் பணி துரித கதியில் நடந்து வருகிறது.

சென்னையில் முக்கியமான இடங்களில் கத்திப்பாரா மேம்பாலமும் ஒன்று. இப்பாலத்தின் கீழ் உள்ள காலி இடத்தில், 14 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டமைப்புகளை உருவாக்க, மெட்ரோ நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

அதன் படி, 54 ஆயிரத்து, 400 சதுர மீட்டர் பரப்பளவில், கடைகள், பூங்காக்கள், குழந்தைகள் விளையாட்டு திடல், ஓட்டல்கள், பஸ் நிறுத்தம், வங்கி, ஏ.டி.எம்.,கள், கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதனையொட்டி, 2019 ஆகஸ்டில் பணிகள் துவங்கப்பட்டன. முதல் கட்டமாக, கடைகள், பூங்காக்கள், பஸ் நிறுத்தங்கள் கட்டுமான பணிகள் நடந்து வந்தன. கடந்தாண்டு கொரோனா ஊரடங்கால், செப்டம்பர் வரை பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

கொரோனா ஊரடங்கு தளர்வுக்கு பின், பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. தற்போது, 40க்கும் மேற்பட்ட கடைகள் கட்டுமான பணி முடிந்துள்ளன. இரண்டு பஸ் நிறுத்தங்கள் கட்டப்பட்டுள்ளன.

ஒரு பூங்கா பணி முடிந்துள்ளது. வாகன நிறுத்தங்கள், குழந்தைகள் விளையாட்டு மையங்கள், ஓட்டல்கள் கட்டுமான பணிகள், சிறிய பூங்காக்கள் கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன.

பணிகளை விரைவாக முடிக்க, மெட்ரோ நிறுவனத்தின் சார்பில், ஒப்பந்ததாரருக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. பாலத்தின் கீழ் அனைத்து, திட்ட பணிகளும் ஓராண்டுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.